**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.596/2022 P.W.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சோலைமுத்து | த–பெ | தங்கவேல் |
| ஊர்: | : | பள்ளத்தூர் | சமயம்: | |
| வயது: | : | 50/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பள்ளத்தூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 24.11.2016 அன்று புதுவயல் சென்று விட்டு பள்ளத்தூருக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் அழகாபுரி அழகுநாச்சியம்மை கோவில் அருகில் சென்று கொண்டிருந்தேன். அப்போது பள்ளத்தூர் போலீசார் வந்து கொண்டிருந்தார்கள். எதிரே வந்த வாகனத்தில் அவர்களை பிடித்து அவர்களை விசாரணை செய்தார்கள். அந்த வாகனம் பல்சர் அதில் இரண்டு நபர்கள் வந்தார்கள். ஒரு நபர் பெயர் பூமிநாதன் மற்றொரு நபர் செல்லத்துரை. அவர்களை போலீசார் விசாரணை செய்தார்கள். எங்களிடம் போலீசார் கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் கையொப்பம் செய்தோம். பூமிநாதனும் செல்லத்துரையும் நகைகளை அவர்கள் ஊரில் வைத்திருப்பதாக சொன்னார்கள். பூமிநாதன் அவர் வீட்டின் அருகில் உள்ளமரத்திற்குள் ஒழித்து வைத்திருப்பதாக சொன்னார். உடன் இருந்த போலீசார் அவர்களையும் எங்களையும் அங்கு அழைத்துச்சென்று அங்கு சென்றவுடன் அதை அவர்கள் எடுத்துக்கொடுத்தார்கள். அங்கு ஒரு ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையது. **அவை முறையை அசாஆ 3 முதல் அசாஆ 5.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த பேப்பரில் போலீசார் பேனாவால் எழுதப்பட்டு அதில் தான் கையெழுத்து பெற்றார்கள். தட்டச்சு செய்து கையெழுத்து வாங்கவில்லை என்றால் நியாபகம் இல்லை. எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் இரண்டு கையெழுத்து செய்தேன். எதில் எதில் கையெழுத்து செய்தேன் என்றால் போலீசார் சொன்னதில் தான் நான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துபார்க்கவில்லை. எந்த மரத்தடியில் இருந்த நகைகளை எடுத்துக்கொடுத்தார்கள் என்றால் தெரியாது நிறைய மரங்கள் இருந்தது.

மேற்படி மரத்தினை சுற்றி நான்கு திசையில் என்ன இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. கலிப்புலி என்ற ஊர் எங்கு உள்ளது என்றால் அமராவதிபுதூருக்கு அருகில் உள்ளது. போலீசார் அழகாபுரில் அழகுநாச்சியம்மன் கோவிலுக்கு கிழக்கு பக்கமா அல்லது மேற்கு பக்கமா நின்றார்கள் என்றால் அது சரியாக நியாபகம் இல்லை. எந்தெந்த போலீசார்கள் நின்றார்கள் என்றால் நியாபகம் இல்லை. மொத்தமாக எத்தனை பேப்பரில் எழுதி கையெழுத்து பெற்றார்கள் என்றால் இரண்டு பேப்பரில் எழுதி கையெழுத்து பெற்றதாக நியாபகம் இருக்கிறது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.11 20:00:39 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.596/2022 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செல்வகுமார் | த–பெ | கருப்பையா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 62/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை கடந்த 2015 ம் வருடம் ஒருநாள் மில்டரி கேண்டினில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு தெரிந்த ராணி ஆசிரியையின் கணவர் எனக்கு தொடர்பு கொண்டு ஆசிரியை பள்ளி விட்டு சென்றுகொண்டிருந்தபோது வேலங்குடி அருகில் சென்றுகொண்டிருந்தபோது அவர் அணிந்திருந்த செயினை அறுத்துக்கொண்டு சென்று விட்டதாகவும் அங்கு போய் பாருங்கள் என்று சொன்னார். மாலை 5.–5.15 மணியளவில் அங்கு சென்று பார்த்தபோது அவர் காவல் நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்தார். நானும் அவர் பின்னால் காவல் நிலையத்திற்கு சென்று காவல் நிலையத்தில் அவரது கணவர் இராணுவத்துறையைச்சார்ந்தவர் ஆகையால் வழக்கை விரைவாக முடித்துக்கொடுங்கள் என்று கெஞ்சி கேட்டேன். ஆசிரியையிடம் கேட்டபோது பள்ளி விட்டு வரும் வழியில் அவர் கழுத்தில் அணிந்திருந்த நகையினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார். அது எத்தனை பவுன் என்று எனக்கு தெரியாது. ரொம்ப நாள் ஆகிவிட்டதால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.11 20:01:14 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.596/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | டயஸ் போஸ்கோ லால் | த–பெ | ஜார்ஜ் லிவிங்ஸ்டன் |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 52/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசிரியர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து ஆசிரியராக பணி செய்து வருகிறேன். கடந்த 08.07.2015 அன்று புதுக்கோட்டை மௌண்ட்சியாம் பள்ளியில் ஆசிரியராக பணியில் இருந்தேன். பள்ளியில் இருந்து நான் 4.45–5.00 மணியளவில் வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். வேலங்குடி புளூஸ் கிராவுண்டு வழியாக வந்து கொண்டிருந்தேன். இருசக்கர வாகனத்தில் எனக்கு சற்று தொலைவுக்கு முன்னால் ஒரு பெண்மணி சென்று கொண்டிருந்தார். பின்னாடி இரண்டு நபர்கள் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் இருந்த நபர் மேற்படி பெண்மணியின் கழுத்தின் அணிந்திருந்த செயினை அறுத்துக்கொண்டு வேகமாக சென்றார். நான் விரட்டி பிடிப்பதற்காக பின்னாடி பின்தொடர்ந்து சென்றேன். அங்கு மூன்று சாலைகள் இருந்ததால் அவர்கள் எந்த சாலையில் சென்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. மீண்டும் வந்து அந்த பெண்மணியிடம் விசாரித்தபோது அவர் செட்டிநாட்டில் உள்ள பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிவதாக சொன்னார். அவருடைய 7 பவுன் செயினை பறித்து சென்றதாக சொன்னார். பின்னர் போலீசில் புகார் அளித்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களை. சம்பவ நேரத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் அவர்களுடைய வாகனத்தின் பதிவெண்ணை என்னால் பார்க்கமுடியவில்லை. அவர்களை நான் பின்புறமாக தான் பார்த்தேன்.

**குறுக்கு விசாரணை**

அசா1 ன் இருசக்கர வாகனத்தின் விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பின்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு நபர்கள் ஓட்டிசென்ற வாகனத்திற்கும் நான் ஓட்டிசென்ற வாகனத்திற்கும் இடையில் எதிர் திசையிலோ நான் சென்ற திசையிலோ ஏதாவது வாகனம் குறுக்காக வந்ததா என்றால் எதிர் திசையில் வரவில்லை என் திசையில் சைக்கிள் வந்தது. சைக்கிளில் வந்த நபரை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அசா1 எந்த

ஊரைச்சார்ந்தவர் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஸ்ரீராம் நகர் செல்லவேண்டும் என்றால் புளூஸ் மைதானம் வர வேண்டியது இல்லை அதற்கு முன்பே பைப்பாஸ் சாலையில் சென்று விடலாம் என்றால் சரிதான். 7 பவுன் செயின் என்பது அசா1 சொன்னதன் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். நான் விரட்டிச்சென்றபோது எனக்கு முன்னலோ பின்னாலோ வேறு நபர் துரத்தி சென்றாரா என்றால் தெரியாது. 7 பவுன் செயினின் அடையாளங்களை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்று நியாபகம் இல்லை. மேற்படி செயினை ஏதாவது வைத்து கட் செய்து கொண்டு போனார்களா இல்லை கழட்டி கொண்டு சென்றாரா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தபோது திருடி சென்ற நபர்களின் அடையாளங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.11 20:00:48 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி